### திருவண்ணாமலை நகராட்சி சார்பில்

# நெகிழி மாற்று பொருட்கள் விற்பனை மையம்

## கலெக்டர் திறந்து வைத்தார்



திருவண்ணாமலை அசலியம்மன் கோயில் தெருவில் நகராட்சி சார்பில் நெகிழி மாற்று பொருட்கள் விற்பனை அங்காடியை கலெக்டர் கே.எஸ்.கந்தசாமி நேற்று திறந்து வைத்து பார்வையிட்டார்.

**திருவண்ணாமலை, ஜன.2:** அரசு பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதையடுத்து திருவண்ணாமலையில் நகராட்சி சார்பில் நெகிழி மாற்று பொருட்கள் விற்பனை மையத்தை கலெக்டர் கே.எஸ்.கந்தசாமி நேற்று திறந்து வைத்தார்.

தமிழகத்தில் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி வீசப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு நேற்று முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது என தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதனை முழுமையாக செயல்படுத்த உள்ளாட்சி அமைப்புகள் மூலம் பல்வேறு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதனிடையே ஜனவரி 1ம் தேதி முதல் கட்டமாக தடை செய்யப்பட்ட 14 வகையான பிளாஸ்டிக் பொருட்கள் அனைவரும் தவிர்க்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, திருவண்ணாமலை நகராட்சி சார்பில், அசலியம்மன் கோயில் தெருவில் பிளாஸ்டிக் மாற்றாக பயன்படுத்த கூடிய துணிப்பை, பாக்கு மட்டை உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் விற்பனை செய்யப்படும் மையத்தை கலெக்டர் கே.எஸ்.கந்தசாமி நேற்று திறந்து வைத்தார்.

மகளிர் குழுக்கள் மூலம் செயல்படும் இந்த மையத்தில் பேப்பர் கப், பாக்கு மட்டை, துணிப்பை, மண் பாண்டங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது.

இதில் நகராட்சி ஆணையாளர் பாரிஜாதம், தாசில்தார் மனோகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.